# இதயக் கோளாறு : நவீன சிகிச்சை வேண்டுமா?

மாரடைப்பு, இதயக் கோளாறு போன்ற மோசமான பிரச்னைகளுக்கு அறுவை சிகிச்சை, ஆஞ்சியோ பிளாஸ்ட்டி சிகிச்சை எனப் பல இருக்கின்றன.

எனினும் அறுவை சிகிச்சை இல்லாமல் எளிதாக, சிக்கலின்றி, செலவு பிடிக்காத ஒரு புதிய நவீன சிகிச்சை முறை இப்போது சென்னையில் கிடைக்கிறது. அந்த புதிய அதிநவீன சிகிச்சையின் பெயர் தான் உநங்த.

ESMR என்பதன் விரிவாக்கம், Extra Corporeal Shockwave Myocardial Revascularisation என்பது ஆகும்.

இதயத் தசைகளின் திசுக்களில் ரத்த ஓட்டம் குறையும்போது அல்லது தடைபடும்போது இதயத்தின் செயல்பாடு பாதிக்கப்பட்டு இயக்கம் நின்று போகிறது. இந்த விளைவைத்தான் மாரடைப்பு எனக் கூறுகிறோம்.எனவே, இதயத் தசைகளின் திசுக்களில் ரத்த ஓட்டத்தை சீராக்குவதற்கு ESMR என்ற நவீன சிகிச்சையில் அதிர்வலைகள் திசுக்கள் வரை அனுப்பப்படுகின்றன.



ரத்த ஓட்டம் சீர்பெற்று இதயம் நன்கு இயங்குகிறது. மருந்துகள், பைபாஸ் அறுவை சிகிச்சை, ஆஞ்சியோ பிளாஸ்ட்டி போன்றவை இதயக் கோளாறுக்கு உதவும் என்றாலும்கூட, ESMRபோன்று முழுமையான தீர்வை அளிக்காது.

இந்த நவீன ESMR சிகிச்சை, சென்னை அண்ணாநகர் நியோமெட் மருத்துவமனையில் இந்தியாவில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ESMR சிகிச்சை முறை ஜெர்மனியிலுள்ள ஈசென் இதய மருத்துவ நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட இதயத் தசையின் மீது மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட ஒலி அதிர்வுகள் செலுத்தப்படும்போது பல புதிய ரத்தக் குழாய்கள் உருவாகி ரத்த ஓட்டம் சீராகிறது.

இது மட்டுமின்றி இந்த சிகிச்சைக்கு மயக்க மருந்து அவசியமில்லை. குறைந்த அளவு அதிர்வலைகள் உடலின் மேல் பகுதியிலிருந்து அனுப்பப்படுகின்றன. நோயாளிக்கு வலி எதுவும் இருக்காது.

சாதாரணமாக படுத்திருந்தால் போதும். இந்த நவீன சிகிச்சையில் பக்க விளைவுகள் ஏதுமில்லை.


**விவரங்களுக்கு...:**
**டாக்டர் எல். சிவபாலன்,**
**தலைமை மருத்துவர்,**
**நியோமெட் மருத்துவமனை,**
**அண்ணாநகர்,**
**சென்னை.**
**தொ.பே.: 26201147,**
**26200882.**